

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு 13.01.2025 அன்று திருச்சிராப்பள்ளி பெரியமிளகுபாறை கி.ஆ.பெ.விசுவநாதன் அரசு மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனை வளாகத்தில் மருத்துவர்கள், மருத்துவ மாணவ, மாணவிகள், செவிலியர்கள், மருத்துவமனை ஊழியர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுடன் இணைந்து சமத்துவ பொங்கலிட்டு, பொங்கல் விளையாட்டுப்போட்டிகளை தொடங்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் வே.சரவணன், கி.ஆ.பெ. விசுவநாதம் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.எஸ்.குமரவேல், துணை முதல்வர் திருமதி.அர்சியா பேகம், மருத்துவமனை துணை கண்காணிப்பாளர் உதய அருணா, மரு.அருண், மருத்துவத்துறை உயர் அலுவலர்கள் மருத்துவ பணியாளர்கள், அரசு அலுவலர்கள், மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள், குழந்தைகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சென்னை, அரசு இசைக்கல்லூரி வளாகம், ராஜா அண்ணாமலைபுரத்தில் நேற்று (16.01.2025) நடைபெற்ற ”சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவில் ஈரோடு முகில் கலைக் குழுவினரின் கரகாட்டம் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியினை பொது மக்கள் ஆர்வமுடன் கண்டுகளித்தனர்.

## சிறுமதியாளர்கள் சுருக்க நினைத்தாலும்

# பேரறிவால் பொலிகிறார் அய்யன் வள்ளுவர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, ஜன. 17 –

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒடிசாவில் பூரி கடற்கரையில் வரையப்பட்ட அய்யன் திருவள்ளுவரின் பேரறிவு சிலையின் மணற் சிற்பத்தை மேற்கோள் காட்டி வெளியிட்ட சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**சிறுமதியாளர்கள் சுருக்க நினைத்தாலும் பேரறிவால் பொலிகிறார் அய்யன் வள்ளுவர்.**

**“மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்**
**கீழல்லார் கீழல் லவர்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.




## துபாய் கார் ரேஸ்

# நடிகர் அஜித்குமார் குழுவிற்கு மூன்றாவது இடம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜன.17–

துபாய் கார் பந்தயத்தில், நடிகர் அஜித்குமார் அவர்களின் அணி 3–வது இடம் பிடித்துள்ளது.

அதனையடுத்து – துணை முதல்வர் அவர்கள், அஜித்குமார் மற்றும் அவரது அணிக்கு, தமது வாழ்த்தினைத் தெரிவித்துச் செய்தி வெளியிட்டுள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் துணை முதல்வர் அவர்கள், “இந்தப் பந்தயத்தில் திராவிட மாடல் அரசின் தமிழ்நாடு விளையாட்டுத் துறை லோகோவை பயன்டுத்தியதற்காக அஜித்குமார் ரேஸிங் அணிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

துணை முதல்வர் அவர்களின் வாழ்த்துச் செய்தி வருமாறு:–

**“2025 துபாயில் நடைபெற்ற 24H கார் ரேஸ் 991 பிரிவில் அஜித்குமார் மற்றும் அவரது குழுவினர் மூன்றாவது இடத்தைப் பிடித்ததை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். இந்த குறிப்பிடத்தக்க சாதனைக்காக அஜித்குமார் மற்றும் அவரது குழுவினருக்கு எனது மன மார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.**

**அதுமட்டுமில்லாமல் அஜித்குமார் ரேஸிங் அணி திராவிட மாடல் அரசை காட்சிப்படுத்தும் விதமாக தமிழ்நாடு ஸ்போர்ட்ஸ் லோகோவை கார் ரேஸின்போது பயன்படுத்தியதற்கு நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.**

**தொடர்ந்து பல வெற்றிகளை பெற்று நமது தேசத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் மென்மேலும் பெருமை சேர்க்க வேண்டுமென அஜித்குமார் மற்றும் அவரது குழுவை வாழ்த்துகிறேன்.**

இவ்வாறு அவர், தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.





ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலில் இந்தியா கூட்டணியின் கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமாரை ஆதரித்து ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி தலைமையில் வீரப்பன் சத்திரம் பகுதியில் திறந்த வேனில் தலைமை கழக பேச்சாளர்கள் ஈரோடு இறைவன், ஈரோடு இளைய கோபால், பவானி கண்ணன் ஆகியோர் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை பொதுமக்களிடம் விளக்கி கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர். வாக்கு சேகரிப்பில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், மேயர் நாகரத்தினம், மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம், பகுதி கழக செயலாளர் வி.சி. நடராஜன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பலர் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர்.



சென்னை, ஜாபர்கான்பேட்டை, ராகவன் காலனி, மாநகராட்சி விளையாட்டுத் திடலில், நேற்று (16.01.2025) நடைபெற்ற ”சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவில் கடலூர் ஸ்ரீ ரேணுகாம்பாள் குழு வின்,இறை நடனம் கலை நிகழ்ச்சி கலைஞர்கள் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்களிடம் வாழ்த்து பெற்றனர்.



சென்னை, பெரம்பூர் முரசொலி மாறன் பூங்காவில் நேற்று (16.01.2025) நடைபெற்ற ”சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாவில் பெரம்பலூர் கலை அருவிக் கலைக்கூடம் குழுவினரின் மயில் காவடியாட்டம் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியினை பொது மக்கள் ஆர்வமுடன் கண்டுகளித்தனர்.

## திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில் – அய்யன்

# திருவள்ளுவர் சிலைக்கு அமைச்சர் எ.வ.வேலு மாலை அணிவித்தார்!

## கழக முன்னோடிகள், பொதுமக்கள் பங்கேற்பு!

திருவள஌ுவர்,ஜன.17-

திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு, திருவண்ணாமலை மாவட்ட திமுக சார்பில், அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மாலை அணிவித்தார். கழக முன்னோடிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

15.1.2025 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோயி லூர் ரோடு, வேட்டவலம் சாலை சந்திப்பில் உள்ள திருவள்ளுவர் சிலை அருகே, திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில் திருவள்ளுவர் தினம் கொண்டாடப்பட்டது.

விழாவில் கலந்து கொண்டு, பொதுப்பணித் துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான எ.வ.வேலு அவர்கள் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து வணங்கினார்.

விழாவில் போற்றுவோம், போற்றுவோம், வள்ளுவரை போற்றுவோம்!

நடப்போம், நடப்போம் குறள் வழி நடப்போம் என உறுதிமொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

விழாவில் கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே. கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், மாவட்ட துணை செயலாளர் பிரியா விஜயரங்கன்,

மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, ஏ.ஏ. ஆறுமுகம், கு.கணேஷ், கற்பகம்சரவணன், துணை மேயர் சு. ராஜாங்கம், நகர நிர்வாகிகள் ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, கோல்டு எஸ்.பிரபு, ஹக்கிம் சேட், துரை. வெங்கட், மாவட்ட துணை அமைப்பாளர்கள் எஸ்.சமயராஜ், ராயல் தியாகு, ஆ.தே.முருகையன், அய்யம்பாளையம் திருநாவுக்கரசு, அத்தியந்தல் ராமகிருஷ்ணன், தொ.மு.ச., பரசுராமன், வட்ட செயலாளர்கள் பி.ஆர்.நாகராஜ், க.பிரகாஷ், சி.கே. சசிகுமார், மு.ஆனந்தன், கே.வெங்கட், குணாளன், ரகுபதி, அ.சபரி, ஆர். சாதிக்பாஷா, பா.தீபன், இரயில்வே சீனுவாசன் மற்றும் பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்
பெருமையுடன் வழங்கும்
பொங்கல் கலைவிழா
இசை சங்கமம்
மாபெரும் மெல்லிசை நிகழ்ச்சி
“அன்றும் - இன்றும் - என்றும்”
18.01.2025 சனிக்கிழமை மாலை 5.30 மணி
கலைவாணர் அரங்கம், சென்னை.

வரவேற்புரை : திருமதி விஜயா தாயன்பன் அவர்கள்
உறுப்பினர் – செயலாளர்
தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

தலைமையுரை : திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்
தலைவர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் /
தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம்

விழாப் பேருரை : மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர்
திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள்
மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்
திரு. பி.கே. சேகர் பாபு அவர்கள்

சிறப்புரை : சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை
அரசு முதன்மைச் செயலாளர்
டாக்டர் சந்தரமோகன். B, இ.ஆ.ப., அவர்கள்

வாழ்த்துரை : மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
திரு. தயாநிதி மாறன் அவர்கள்
தி இந்து குழுமம் இயக்குநர்
திரு. என். ரவி அவர்கள்

இசை சங்கமத்தில் பங்குபெறும் பிரபல திரைப்பட இசைக் கலைஞர்கள்
திரு. டி.எல்.மகாராஜன் ❖ திரு. முகேஷ் ❖ திரு. சாய் விக்னேஷ்
திரு. பி.வி.ரமணன் ❖ திருமதி ஜெயா ஸ்ரீகுமார் ❖ செல்வி அனு ஆனந்த்

அனைவரும் வருக! வருக!! அனுமதி இலவசம்!

செ.ம.தொ.இ./45/வரைகலை/2025